## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2021

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 14,712,522 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் | உரிய மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக தேவையான | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஏற்பட்டிருந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் கல்வி நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 67 பாடநெறிகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணத்தில் 15 சதவீதமான ரூபா 3,381,714 பெறவேண்டிய தொகையையும், அந்த நிறுவனத்தால் இந்த நிறுவனத்திற்காக நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 19,968,877 தொகையையும் மீளாய்வாண்டிலேனும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் கணக்குகள் பிரிவிற்கு கிடைக்காமையால் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமுதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,290,285 தொகை மற்றும் வானொலி, தொலைக்காட்சி | கலைக்கப்பட்ட அமைச்சிலிருந்து பெறவேண்டிய மீதி தொடர்பாக முன்னாள் இருந்த அமைச்சுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் | செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கும் பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,959,496 தொகை என்பன 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மீதி தொடர்பாக அமைச்சுடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. | தற்போது நிறுவனத்திற்குரிய வரிசை அமைச்சிற்கும் இது தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய மூலதன நிதி பொது திறைசேரியிலிருந்து விடுவிக்காமையின் அடிப்படையில் மேலும் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 6 ஆம் பந்தியின் (ஊ) பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் (பீ) பிரிவு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக் கணக்கில் ரூபா 64,096,718 மீதி முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று குறுங்கால மற்றும் நீண்டகால சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த நிதி முதலீடு செய்யப்படாமல் சில வருட காலமாக பொது சேமிப்பு கணக்கில் பேணிச் செல்லப்பட்டதன் காரணமாக முதலீட்டிலிருந்து பெற வேண்டியதாகவிருந்த உயர்ந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் ரூபா 60 மில்லியன் இலங்கை வங்கி ஹோமாகம கிளையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனர்களினால் வைப்புச் செய்யப்பட்ட மீளச்செலுத்த வேண்டிய ரூபா 542,000 ஆன | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இந்த மீதிக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. உரிய | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) | வைப்பு மீதியில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 117,000 ஆகும். இந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பாளர்களுக்காக மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | 2020 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | பயிற்சி பாடநெறியை நடாத்தும் பொறுப்பு அரச கரும மொழிகள் விடயப் பொறுப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் தேசிய மொழிக் கல்வி பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் உத்தியோகபூர்வ மொழி மற்றும் தொழில்கல்வி நிறுவனத்திற்கு பயிற்சி பாடநெறி கையளிக்கும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்த துடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அந்த நிறுவனங்களினால் முறையே 07 மற்றும் 09 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. | அரச நிர்வாக சுற்றறிக்கை 2020/18 ஆம் இலக்கம் மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் 2019/2020 ஆம் ஆண்டுகளில் நிறுவனத்தின் முழுமையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலின் கீழ் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் பதிவு செய்துள்ள உத்தியோகபூர்வ மொழி மற்றும் தொழிற்கல்வி நிறுவனத்தின் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிறுவனத்திற்கு பதவியணியினர்களை சேர்த்தல், சம்பளம் மற்றும் படிகளை தீர்மானித்தல் தவிர்க்கப்பட வேண்டிய போதிலும் அந்த | புதிய அரசின் சௌபாக்கியத்தின் தொலைநோக்கு கொள்கை வெளியீட்டின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தம்புள்ளை நிலையத்தை திறந்து வைப்பதற்கு தேவையாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலோசனைகளுக்கு இணங்காமல் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது 10 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 2,899,002 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | இருந்தமையால் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. மேலும் இந்த ஆட்சேர்ப்பிற்காக நிறுவனத்தில் உழைக்கப்பட்ட வருமானத்தில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கு படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் ஏனைய நிதிரீதியான நலன்களை செலுத்தும் போது அமைச்சரவை அல்லது அரச நிர்வாக அமைச்சர் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்ற நலன்கள் மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது உரிய அங்கீகாரமின்றி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 630,000 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | நியதிச்சட்ட நிறுவனமொன்றாக இருந்த போதிலும் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்காக மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக எந்தவொரு படியோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஏனைய வரப்பிரசாதங்களோ உரித்தாக இருக்கவில்லை. நிறுவனத்தில் உழைக்கின்ற வருமானத்தை பயன்படுத்தி இந்த ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,849,346 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7,946,868 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,796,214 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 9,012,909 இனாலும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வருமானம் ரூபா 6,350,425 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், நிர்வாக செலவினம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட செலவினங்கள் முறையே ரூபா 7,292,031 இனாலும், ரூபா 29,780,921 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கத்திற்கு உட்பட்ட பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படாமல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் வேலைநீக்கத்திற்கு உட்பட்ட காலத்திற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 666,026 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.01.31 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் வியப் பொறுப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் கடிதத்தை கவனத்தில் கொண்டு மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு உரிய சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 2021.07.15 ஆந் திகதி முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதை துரிதப்படுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலகத்தை இயலுமானவரை அரசாங்க கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லவேண்டியிருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், முகாமைத்துவ சபையினாலும் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு மாத்திரம் இடவசதிகள் உள்ள கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்த போதும் தற்போது நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் உடன்படிக்கை காலம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் இரண்டு வருட காலத்திற்காக நீடிக்கப்பட்டு அலுவலக கட்டிடத்திற்காக ரூபா 16,200,000 வாடகைப் பணம் | இந்தக் கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக 2022.12.31 வரை அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. நிறுவனத்தை தாபிப்பதற்கான பொருத்தமான அரசாங்கத்தின் கட்டிடமொன்றை கண்டறிய முடியாதிருந்தமையால் தொடர்ந்தும் இந்தக் கட்டிடத்தில் நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்றது. நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற மொழி பயிற்சி பாடநெறிகளுக்காக இந்தக் கட்டிடம் பயன்படுத்தப்படுவதுடன் நிறுவனத்தின் பொதுவான பயிற்சி பாடநெறிகளை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. 32 உத்தியோகத்தர்களையுடைய சிறிய பதவியணியினருக்காகவும் மற்றும் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு விரிவுரை மண்டபத்தை அமைப்பதற்காகவும் ரூபா 4,140,643 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பயிற்சி பாடநெறிப் பணம் செலுத்தி ஏனைய இடங்களில் நடாத்தியதன் காரணமாக கட்டிடம் உச்ச இயலளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடாத்துவதற்காக ஏனைய இடமொன்றிற்காக இந்த ஆண்டில் பணம் செலுத்தப்படவில்லை. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்காக 100 மணித்தியால மொழிப் பாடநெறிகள் 04, பிரிவெனாவில் கல்வி கற்கின்ற 200 பௌத்த பிக்குமார்களுக்காக 05 நிகழ்ச்சித் திட்டங்கள், தமிழ் மொழி பாடநெறிகளுக்காக 04 பாடப் பரிந்துரைகள் தயாரித்தல், சிங்கள டிப்ளோமா மொடியூல் தயாரித்தல் மற்றும் இரண்டாம் மொழி கற்பித்தல் சான்றிதழுக்காக பாட பரிந்துரையினை நவீன மயப்படுத்துதல் போன்ற 05 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,569,000 கிரயத்தை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஒரேயொரு இடத்தில் பாடநெறி நடாத்துதல் கஷ்டமாக இருந்தமையால் பயிற்சி பாடநெறி ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வளப் பங்களிப்பாளர்களை வரவழைப்பதில் வசதியீனமாக இருந்தமையால் தமிழ் மொழி விடய பரிந்துரைகளை தயாரிப்பதற்கும், சிங்கள டிப்ளோமா மொடியூல் தயாரிப்பதற்கும், தமிழ் மொழி பாட பரிந்துரைகளை நவீனமயப்படுத்துவதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |